நான்காவது தேர்ச்சி : பல்வேறு பக்தி முயற்சிகளின் வழியாக செபவாழ்வை மென்மேலும் வளர்த்துக் கொள்வர்

18

## 4.1. ஆராதனைக்குரிய நற்கருணை

இத்தாலி தேசத்திலே உள்ள லன்சியானோ என்னும் நகரில் குருவானவர் ஒருவர் கி.பி. 700ம் ஆண்டு பணி செய்துவந்தார். இவருக்கு தேவநற்கருணையில் இறைபிரசன்னத்தையிட்டு சந்தேகம் எழுந்தது. திருப்பலி வேளையில் ஆசீர்வதிக்கப்படும் அப்பமும், இரசமும் இயேசுவின் திருவுடலாகவும், திரு இரத்தமாகவும் மாறுகிறது என்பதை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஒரு நாள் அவர் திருப்பலி நிறைவேற்றுகையில் புதுமையான ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அங்கே அவர் பெரியதொரு சத்தத்தை கேட்டார். அந்த நேரம் வசீகர வார்த்தைகள் குருவானவரால் உச்சரிக்கப்பட்ட வேளையாயிருந்தது. பீடத்தில் அப்பமும், இரசமும் இயேசுவின் உடலாகவும், இரத்தமாகவும் மாறியது. திருப்பலியில் பங்குபற்றிய அனைவரும் அப்புதுமையைக் கண்டனர்.

பல்லாண்டுகளுக்குப் பின் 1970 அளவில் விஞ்ஞானிகளும், வைத்தியர்களும், அறிஞர்களும் இதைப்பற்றி ஆராய்ந்து பரிசோதனை நடத்தினர். அதிலே இயேசுவின் உடலும், இரத்தமும் உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டது. அந்த அப்பம் இத்தாலியில் லன்சியானோ நகரில் புதிதாகக் கட்டப்பட்ட புனித பிரான்சிஸ் அசிசி தேவாலயத்தில் இன்றும் பக்தர்கள் பார்க்கக் கூடிய வகையில் வைக்கப்பட்டுள்ளது.

**இத்தாலியில் லன்சியானோ நகரில் பாதுகாக்கப்படும் கிறிஸ்துவின் திரு உடலும் திரு இரத்தமும்**






தேவநற்கருணையிலே இயேசு தம் பிரசன்னத்தை வெளிப்படுத்திய பல புதுமைகள், உலகின் பல இடங்களிலும் நடைபெற்றுள்ளது. மேலே கூறப்பட்ட புதுமை உயிருள்ள கிறிஸ்து எம்முடன் வாழ்கிறார் என்பதை வெளிப்படுத்தும் ஒரு புதுமை மட்டுமே.

இயேசு தாம் பாடுபடுவதற்கு முந்தின நாள் இரவில் நற்கருணையை தமது இறுதி இராவுணவின் போது ஏற்படுத்தினார்.

> பின்பு அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து,' இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள் என்றார்.
>
> லூக். 22:19

அன்று முதல் இன்றுவரை திருப்பலியில் இதையே நாம் நினைவுகூருகிறோம். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை நினைவுகூரும் நாம் வசீகரிக்கப்பட்ட அப்பமும் இரசமும் புதிய உடன்படிக்கைக்கான இயேசுவின் உடலும் இரத்தமும் என நம்புகிறோம். இயேசுவே அதில் கடவுளாகவும், மனிதனாகவும் எழுந்தருளியிருக்கிறார். தம்மைப் பின்பற்றும் திருச்சபையுடன் இறுதிவரை இருந்து போதிக்கவும், பலப்படுத்தவும், தூய்மைப்படுத்தவும் விரும்பியதால் நற்கருணையை கிறிஸ்து நமக்கு வழங்கினார்.



இம் மகத்தான அருள்வரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் நற்கருணையைத் தகுந்த ஆயத்தத்துடன் பெற்றுக் கொள்ளவேண்டும். சிறப்பாக நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து ஆயத்தமாக வேண்டும்.

இது பற்றி கத்தோலிக்க திருச்சபை பின்வருமாறு கற்பிக்கிறது.

நற்கருணை எம்மை பாவத்திலிருந்து விடுவிக்கின்றது. நற்கருணை விருந்தில் நாம் உண்ணும் கிறிஸ்துவின் உடல் எங்களுக்காகவே கையளிக்கப்பட்டது. இரத்தம் பாவமன்னிப்பிற்காக சிந்தப்பட்டது. இதனிமித்தம் நற்கருணை கடந்த கால பாவங்களிலிருந்து நம்மை விடுவித்து பாதுகாத்து கிறிஸ்துவோடு இணைக்கிறது.

கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி 1393

## நற்கருணை ஆராதனை

நற்கருணைப் பவனிப்பக்தி ஆரம்பமாகிய போதுதான் கதிர்ப்பாத்திரம் தோன்றியது. கதிர்ப்பாத்திரத்தில் நற்கருணை ஓர் உயர்ந்த இடத்தில் எடுத்து வைக்கப்பட்டது. தேவநற்கருணை பீடத்தின் மேல் எழுந்தேற்றம் செய்து வைக்கப்படும்போது விசுவாசிகள் தமது ஆராதனையை இறைமகன் இயேசுவுக்கு செலுத்துகின்றனர். ‘‘மாண்புயர் இவ்வருட்சாதனத்தைத் தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்” என்ற பாடல் பாடி இறைவனுக்கு எமது புகழ்ச்சி, ஆராதனையைச் செலுத்துகின்றோம்.

### நற்கருணை ஆராதனைகள் நடைபெறும் விசேட தினங்கள்

- பெரிய வியாழன்
- ஆலயத் திருவிழாவிற்கு முன்தினம் மாலை ஆராதனை
- கிறிஸ்துவின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழா
- மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை
- பங்குகளில் நடைபெறும் விசேட நற்கருணை ஆராதனைச் சந்தர்ப்பங்கள்


## திருச்சபையில் நற்கருணை ஆராதனைக்கு விசேட இடம் வழங்கப்பட்டுள்ளதற்கான காரணங்கள்.

- நற்கருணையில் கிறிஸ்துவின் உயிருள்ள பிரசன்னம்.
- நற்கருணை மீட்பின் அருள் அடையாளம்
- நற்கருணையில் கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பை நினைவு கூருதல்
- நற்கருணையில் எமக்காக காத்திருக்கும் கிறிஸ்துவுடன் உளம் திறந்து உரையாடும் சந்தர்ப்பம்.
- அற்ப பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுகிறோம்.

### செயற்பாடு

1. நற்கருணை என்றால் என்ன?
2. இயேசு நற்கருணையை நமக்கு ஏன் வழங்கினார்?
3. திருப்பலியில் குருவானவரால் வசீகர வார்த்தைகள் உச்சரிக்கப்படுகின்ற போது அப்ப இரச குணங்களில் ஏற்படும் மாற்றம் என்ன?

## திருச்சபையால் மேற்கொள்ளப்படும் நற்கருணைப் பக்தி முயற்சிகள்



**நற்கருணை எழுந்தேற்றம்**

திருப்பலியில் வசீகர வார்த்தைகளுக்குப் பின் குரு மக்களைப் பார்த்து ஆராதனை செய்யும் பொருட்டு அர்ச்சிக்கப்பட்ட அப்பத்தை உயர்த்துகிறார். இந்த நேரத்தில் எம் சிரங்களைத் தாழ்த்தி நற்கருணையில் எழுந்தருளிய ஆண்டவர் இயேசுவை விசுவசித்து எமது பக்தி வணக்கத்தை வெளிப்படுத்தவேண்டும்.

**நற்கருணைப் பவனி**

நற்கருணைக்கு எமது ஆராதனையையும் வணக்கத்தையும் வெளிப்படுத்துவதற்காக நாம் நற்கருணையை பகிரங்கமாக பக்தியுடன் பவனியாக எடுத்துச் செல்லும் பாரம்பரியம் கத்தோலிக்க திருச்சபையிடம் உள்ளது. கிறிஸ்துவின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழாவை நெருங்கிய நாளில் நற்கருணை ஆராதனையையும் நற்கருணைப் பவனியையும் இன்றும் எமது பங்குகளில் நடாத்துகிறோம்.

**நற்கருணைச் சந்திப்பு**

திருப்பலி முடிந்ததும் நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம் உண்டு என்பது திருச்சபையின் விசுவாசமாகும். இங்கு நம்பிக்கையை வலுவூட்டவே இப்பக்தி முயற்சி உதவுகிறது. திருப்பலி வழியாக பேழையில் இருக்கும் நற்கருணை அதன் புனித நிலையை அடைகிறது. எனவே நற்கருணைப் பேழையிலே எமக்காக ஆவலோடு காத்திருக்கும் நற்கருணைநாதரைச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சென்று ஆராதித்து, அவரோடு பேசி, அவரிடமிருந்து மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**நற்கருணை ஆசீர்**

நற்கருணை ஆராதனைக்காக பகிரங்கமாக, எழுந்தேற்றம் செய்யப்பட்டு ஆராதனையின்பின் குருவினால் நற்கருணை ஆசீர் வழங்கப்படும்.

நித்திய ஸ்துதிக்குரிய பரிசுத்த
பரம திவ்விய நற்கருணைக்கு
சதாகாலமும் ஆராதனையும்
ஸ்துதியும் ஸ்தோத்திரமும் நமஸ்காரமும்
உண்டாகக்கடவது

## செயற்பாடு

1. பின்வரும் கூற்றுக்களை மனனம் செய்க.

I
“உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்”
(மத். 28:20)

II
“வசீகரிக்கப்பட்ட அப்பத்திலும் இரசத்திலும் இயேசு மெய்யாகவே பிரசன்னமாயிருக்கிறார்.”
(க.தி.ம. 1378)

III
“திருச்சபையின் அருள்வடிவம் முழுவதும் தூய்மைமிகு நற்கருணையில் அடங்கியிருக்கிறது”
(திருத்தந்தை 2ம் அருள்சின்னப்பர்)

2. தியானம் செய்வோம்

- பாடசாலையில் அமைதியான ஒரு இடத்துக்கு செல்லுங்கள்
- ஆசிரியரின் அறிவுரைப்படி வட்டமாக அமருங்கள்
- கண்களை மூடி நன்றாக மூச்செடுத்து வெளிவிட்டு உடல் உள்ளத்தை இலகுவாக்குங்கள்.
- சுற்றுப்புறச் சத்தங்களுக்கு 2,3 நிமிடங்கள் செவிமடுங்கள்.
- யோவான் 15:4,5 திருவிவிலியப் பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்க ஏனையோர் செவிமடுங்கள்
- இப்பகுதியை 2,3 நிமிடங்கள் தியானியுங்கள்
- மனதில் வரும் கருத்துக்களை ஒவ்வொருவரும் வெளிப்படுத்துங்கள்.
- பின்வரும் பாடலுடன் நிறைவு செய்யுங்கள்.

அன்பின் தேவ நற்கருணையிலே
அழியா புகழோடு வாழ்பவரே
அன்புப் பாதையில் வழிநடந்தே
அடியோர் வாழ்ந்திட துணை செய்வீர்

அற்புதமாக எமைப் படைத்தீர்
தற்பரன் நீரே எமை மீட்டீர்
பொற்புடன் அப்பரச குணத்தில்
எப்பொழுதும் வாழ் இறைவனானீர்
எத்தனை வழிகளில் உமதன்பை
எண்பித்தெமை நீர் ஆட்கொண்டீர்

கல்வாரி மலையின் சிகரமதில்
கனிவுடன் தினம் எமை நிலை நிறுத்தும்
நற்கருணை விசுவாசமதில்
நம்பிக்கை யூட்டி வளர்த்திடுவீர்
இளமையின் பொலிவால் திகழ் திருச்சபையும்
யாவரும் வாழ தயை செய்வீர்

3. ஆக்கம் ஒன்று தயாரிக்கவும்
(பிறிஸில் போட், கத்தரிக்கோல், மாக்கர் பேனா, மண் நிரப்பிய சில சிறிய பேணிகள், சிறிய மரக்கிளை, நூல்)
அ. மண் நிரப்பிய பேணியில் மரக்கிளையை நாட்டுங்கள்.
ஆ. நற்கருணையில் இருக்கும் இயேசுவுக்கு அன்பு செய்யும் நீர் உம்மில் வளர்த்துக்கொள்ள வேண்டிய நற்பண்புகளை சிறிய பிறிஸில் போட் துண்டுகளில் எழுதி நூலால் கட்டி மரக்கிளையில் தொங்கவிடவும்

4. சுவரொட்டி தயாரித்தல்
நற்கருணையில் இருக்கும் உயிருள்ள இயேசு விரும்புகின்ற, அதேபோல் விரும்பாத செயல்கள், இன்றைய சமுதாயத்தில் இடம் பெறுகின்றன. மேற்கூறிய செயல்களைச் சித்தரிக்கும் படங்களையும் தலைப்புச் செய்திகளையும் பத்திரிகைகளில் இருந்து வெட்டி எடுத்து கிறிஸ்து விரும்பும், விரும்பாத செயல்களை வெவ்வேறாக பிறிஸில் போட்டில் ஒட்டி இரு சுவரொட்டிகள் தயாரிக்கவும்.

5. கீழ்வரும் வினாக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடவும்.
அ. நற்கருணையை இயேசு பெரிய வெள்ளிக்கிழமை ஏற்படுத்தினார். (..........)
ஆ. தூய ஆவிப் பெருவிழாவின் பின் இரண்டாம் ஞாயிறு இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவாகும். (..........)
இ. உயிர்ப்பு ஞாயிற்றுக்கிழமையில் பகிரங்க நற்கருணை ஆராதனை நடைபெறும். (..........)
ஈ. ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று நற்கருணையை உட்கொள்ள வேண்டும். (..........)
உ. நற்கருணை ஆராதனையின் போது நமது வாழ்வு புத்துயிர் பெறுகிறது. (..........)

## வாழ்க்கைக்கு

நற்கருணையில் உயிருடன் வாழும் கிறிஸ்துவை
அன்பு செய்யும் நாம் அனைவரையும்
அன்பு செய்ய வேண்டும். அனைவரையும்
சமத்துவமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.
அனைவரையும் மதிப்போம்,
அனைவரையும் பாராட்டுவோம்,
நல்ல வார்த்தைகளைப் பேசுவோம்.


இலவச விநியோகத்திற்காக